சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.35/2018

2022 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் -23 ம் நாள் வா. சா. 2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.இந்துலதா, பி.ஏ,பி.எல்., சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஜெயராஜன் | வயது | |
| த/பெ. | கிருஷ்ணசாமி கவுடர் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை-

அழைப்பாணையின் பேரில் பிரமாணதாரர் ஆஜர். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது முத்துக்கல்லூரில் இருந்து வருகிறேன். முன்பு கல்லூரி பேராசிரியர் மற்றும் காலேஜ் டீன் மற்றும் டைரக்டர் பதவியில் இருந்து பிறகு ஓய்வு பெற்று விட்டேன். வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவரையும் தெரியும்.. 1ம் பிரதிவாதி சோலைய கவுடர் என்னுடைய தாய்மாமா ஆவார். என் அம்மாவின் தம்பி ஆவார். அவருக்கு வெள்ளியங்காடு கிராமத்தில் சொத்துக்கள் இருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள் அனைவரும் விவசாயிகள் என்றால் சரிதான். அனைவருக்கும் வெள்ளியங்காடு கிராமத்தில் விவசாய பூமிகள் இருக்கிறது என்றால் சரிதான். போதுமான தண்ணீர் வசதி இல்லாததால் ஆற்றோரமாக இருக்கும் ஓடை ஓரமாக இருக்கும் பூமியை விலைக்கு வாங்கி அதிலிருந்து கிணறு வெட்டி குழாய் மூலம் தங்கள் பூமிக்கு தண்ணீர் கொண்டு போக ஏற்பாடு செய்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு மேற்படி ஓடை ஓரமாக பூமி சொந்தமாக இருக்கிறது என்றால்சரிதான். வாதிகள் அனைவரும் சோலைய கவுடரின் பூமிகளில் இருந்து தங்கள் பூமிக்கு தண்ணீர் கொண்டு போக 1ம் பிரதிவாதியை அணுகினார்கள் என்றால் சரிதான். அந்த விவசாய பூமிகள் தண்ணீர் வசதி இல்லாதவை . எனவே தான் விவசாயத்திற்காகவும் ஆடு, மாடுகளுக்காகவும் தண்ணீர் கொண்டுபோக 5 செண்ட் பூமியை வாங்கினார்கள். அந்த பூமியை வாங்குவதற்கு விலைபேச என்னை அழைத்தார்களா என்றால், 1ம் பிரதிவாதி சோலைய கவுடரும் அவர் மகன் நடராஜன் என்னை 2 நாட்களுக்கு முன்பு கூப்பிட்டார்கள். காலையில் வந்து பூமியை விலை பேசவும்

அக்ரிமெண்ட் போடுகிறார்கள் என்றும் என்னிடம் சொல்லி மாலையில் வருமாறு 1ம் பிரதிவாதியும் அவர் மகனும் என்னிடம் சொன்னார்கள். நான் 10.9.2014 அன்று மாலை சுமார் 6, 7 மணியளவில் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு போனேன். அப்போது அங்கு என் மாமா, என் அத்தை , அவர் மகன்கள் நடராஜன் மற்றும் கோவிந்தராஜன் , மகள் ஆகியோர்கள் இருந்தனர். வாங்கும் பார்ட்டிகளும் அங்கே இருந்தார்கள். அப்போது சோலைய கவுடருக்கு பாத்தியப்பட்ட பூமியை விலைக்கு கொடுப்பதாக ஒப்புக் கொண்டாரா என்றால் விலை பேசி முடித்தோம். என்ன விலைக்கு பேசப்பட்டது என்றால் ரூபாய் 7,11,000 த்துக்கு பேசி முடித்தார்கள். டோக்கன் அட்வான்ஸ் கொடுத்தார்கள். அவ்வாறு பேசி முடித்த உடன் சோலைய கவுடரிடம் அசல் பத்திரம் இல்லாததால் அடுத்த நாள் கிரைய ம் செய்து கொள்ள இயலவில்லை என்றால் சரிதான். அதனால் தான் டோக்கன் அட்வான்ஸ் ஆக ரூ. 25,000 கொடுத்தார்கள். வாதிகள் அனைவர் பேரிலும் உடன்படிக்கை போடாமல் 18ம் வாதி ராஜப்பன் பெயரில் மட்டும் போட்டார்கள் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை என்னை எழுத சொன்னார்கள் என்றால் சரிதான். நான் தான் எழுதினேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்பந்தம் என் கைப்பட நான் எழுதியது தான். அதில் 1ம் பிரதிவாதி சோலைய கவுடரும் ராஜப்பனும் கையெழுத்து போட்டார்கள். அந்த ஒப்பந்தம் வா சா ஆ 5 ஆகும். அந்த ஒப்பந்தத்தில் வெள்ளியங்காடு கிராமம் க.ச. 515/2 ல் மேபுறத்தில் உள்ள 5 செண்ட் பூமியில் அதனைத் தொடர்ந்து தெற்கு புறமாக முத்துக்கல்லூர் அன்சூர் ரோடு வரை செல்லும் தென் வடல் வண்டித்தடத்தில் குழாய் அமைத்துக் கொள்ளும் உரிமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பூமியை விலைக்கு வாங்க டோக்கன் அட்வான்ஸ் கொடுத்த பிறகு அன்றே சுவாதீனமும் ஒப்படைத்து விட்டார்கள். அடுத்த நாள் கிணறு வெட்டும் வேலையை ஆரம்பித்து விட்டார்கள். வாதிகள் அனைவரும் 2 நாட்கள் கழித்து சோலையா கவுடரிடம் ரூ. 4,75,000 கொடுத்து மற்றொரு அக்ரிமெண்ட் வாதிகள் அனைவர் பெயரிலும் போட்டு கொண்டார்கள். டோக்கன் அட்வான்ஸ் ஏற்கனவே 25,000 கொடுக்கப்பட்டிருந்தது. 2 வது ஒப்பந்தம் போடப்பட்டபோது வாங்கிய ரூபாய் 4,75,000/-த்தை சோலைய கவுடர் எங்கள் வீட்டில் வைத்திருந்தார். மீண்டும் ஒரு வாரம் கழித்து வந்து பணத்தை வாங்கி கொண்டு போனார். அக்ரிமெண்ட் போட்ட இடத்தில் வாதிகள் கிணறு வெட்டி குழாய் பதித்து சோலார் மோட்டாரும் வைத்துள்ளார்கள். ஒப்பந்தத்தில்குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் குழாய் பதித்து அவரவர் பூமிக்கு தண்ணீர் கொண்டு போய் கொண்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை ஒப்பந்தப்படி அவ்வாறு தான் தண்ணீர் கொண்டு செல்கிறார்கள் என்றால் சரிதான். சோலார்போடவும் கிணறு வெட்டி தண்ணீர் கொண்டு செல்லவும் நிறைய செலவாகும் என்றால் சரிதான். சோலைய கவுடர் ஒப்பந்தப்படி இன்றைய தேதி வரை வாதிகளுக்கு

அந்த நிலத்தில் கிரையம் செய்து தரவில்லை என்றால் சரிதான். அதன் அசல் பத்திரத்தை இது வரை வாதிகளிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிகள் அவ்வாறு தண்ணீர் கொண்டு போகும்பொழுது ஒரு பிரச்சினை ஆனது . சோலைய கவுடரின் 2ம் மகன் கோவிந்தராஜன் தண்ணீர் போகும் குழாய்களை ஜே பி பி வைத்து உடைத்து அங்கே தென்னங்கன்றுகளை வைத்து சேதப்படுத்தி விட்டதாக வாதிகள் என்னிடம் சொன்னார்ள். காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தார்கள். 1ம் பிரதிவாதி வீட்டிற்கு நானும் சென்றேன். அப்போது பணம் பத்தாது என்று மேலும் 3 லட்சம் பணம் வேண்டும் என்று அவர் கேட்டார். ஏற்கனவே நானும் அவ்வாறு பத்து செண்ட் சுமார் 6 லட்சத்திற்கு வாங்கினேன். எனவே சோலைய கவுடரிடம் 5 செண்டிற்கு அவர் கேட்கும் தொகை அதிகம் என்று சொல்லி சுமார் 1 லட்சம் அதிகமாக கொடுக்க நான் பேசி முடித்து விட்டேன். 1 லட்சம் மட்டும் அதிகமாக கொடுக்க பேசப்பட்டதை சோலைய கவுடர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் ஒப்பந்தப்படி மீத தொகையை கொடுத்து கிரையம் செய்து கொள்ள வாதிகள் தயாராக இருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் தலையிட்டதன் பேரில் தற்போது குழாய் சரி செய்யப்பட்டு தண்ணீர் வாதிகளின் பூமிக்கு பாய் ந்து கொண்டிருக்கிறது என்றால் சரிதான். வாதிகள் பலமுறை கேட்டும் 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்காததால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளதாக என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - ஒத்திவைக்கப்படுகிறது

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-S.Indulatha,**
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM